**ஜூலை – 21**

# TNPSC துளிகள்

- ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டின் இறுதிக்குள் 20 ஆயிரம் சுகாதார நல மையங்கள் அமைக்கப்படும் என்று மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் ஹர்ஷ் வர்தன் அறிவித்துள்ளார்.
    - இத்திட்டத்தின் கீழ் நாட்டில் மொத்தம் 1.5 இலட்சம் சுகாதார நல மையங்கள் ஏற்படுத்தப்படும்.


# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாட்டில் மகப்பேற்று இறப்பு விகிதம்

- தமிழ்நாட்டில் மகப்பேற்று இறப்பு விகிதம் (MMR - Maternal Mortality Rate) 6 புள்ளிகள் குறைந்திருக்கின்றது.
- 2018 ஆம் ஆண்டு மாநில சுகாதார மேலாண்மைத் தகவல் அமைப்புத் தரவின்படி, MMR புள்ளி 1 இலட்சம் குழந்தை பிறப்புகளுக்கு 66-லிருந்து 60 ஆகக் குறைந்துள்ளது.
- 2030 ஆம் ஆண்டில் 1 இலட்சம் குழந்தைகளுக்கு 70க்குக் கீழே MMR-ஐ கொண்டு வரும் நீடித்த வளர்ச்சி இலக்கினை 2014-16 வரையிலான காலகட்டத்தில் தமிழ்நாடு எட்டியுள்ளது.
- இந்தியாவின் மகப்பேற்று இறப்பு விகிதம் 130 ஆக உள்ளது.

### *MMR பற்றி*

- மகப்பேற்று இறப்பு என்பது குழந்தைப் பிறப்பு அல்லது கருத்தரித்தலின் போது ஏற்படும் பிரச்சினைகள் காரணமாக ஏற்படும் இறப்புகளைக் குறிக்கின்றது.
- இது ஓராண்டில் 1 இலட்சம் குழந்தைப் பிறப்புகளுக்கு இறக்கும் பெண்களின் எண்ணிக்கையாகும்.



# சர்வதேசச் செய்திகள்

## ப்ளூம்பெர்க் செல்வந்தர்கள் குறியீடு

- உலகின் மிகப்பெரிய செல்வந்தராக அமேசானின் தலைவரான ஜெப் பெசோஸ் தொடர்கிறார். இவருடைய மொத்த சொத்து மதிப்பு 125 பில்லியன் அமெரிக்க டாலராகும்.
- பில் கேட்ஸ் 107 பில்லியன் டாலர் சொத்து மதிப்புடன் 3-வது இடத்தில் உள்ளார்.
- மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் இணை நிறுவனரான பில்கேட்ஸ் ப்ளூம்பெர்க் செல்வந்தர்கள் குறியீட்டில் ஒருபோதும் இரண்டாவது இடத்திற்குக் கீழே சென்றதில்லை. ஆனால் தற்பொழுது இவர் LVMH நிறுவனத்தின் தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியான பெர்னார்டு அர்னால்ட் என்பவரால் 3-வது இடத்திற்குத் தள்ளப் பட்டுள்ளார்.
- பில் கேட்ஸின் கொடைப் பண்பு சார்ந்த முயற்சிகள் இந்தத் தரவரிசையில் இவர் பின்தங்கியதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்றாகும் என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.
- பில் கேட்ஸ் 35 பில்லியன் அமெரிக்க டாலருக்கு மேலாக பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.
- செல்வமிக்க இந்தியரான முகேஷ் அம்பானி இந்தத் தரவரிசையில் 51.8 பில்லியன் அமெரிக்க டாலர் சொத்து மதிப்புடன் 13வது இடத்தில் உள்ளார்.
- அஸிம் பிரேம்ஜி என்பவர் இரண்டாவது செல்வமிக்க இந்தியராக இந்தத் தரவரிசையில் 20.5 பில்லியன் டாலர் சொத்து மதிப்புடன் 48-வது இடத்தில் உள்ளார். இவருக்கு அடுத்து இந்தத் தரவரிசையில் சிவ் நாடார் 92-வது இடத்திலும் உதய் கோட்டக் 96-வது இடத்திலும் உள்ளனர்.

*இதுபற்றி*

- ப்ளூம்பெர்க் செல்வந்தர்கள் குறியீடு என்பது 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் ப்ளூம்பெர்க் செய்தி நிறுவனத்தால் வெளியிடப்படும் உலக செல்வந்தர்களின் தினசரித் தரவரிசையாகும்.
- இது உலகில் உள்ள 500 செல்வமிக்க நபர்களைப் பட்டியலிடுகின்றது.

# பொருளாதாரச் செய்திகள்

## மிகவும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட மாநிலம்

- பெங்களூருவில் உள்ள பணவழங்கீட்டுத் தீர்வுகள் நிறுவனமான “ரசோர்பே” ஆனது “வளர்ந்துவரும் நிதியியல் தொழில்நுட்பங்களின் சகாப்தம்” என்ற தனது டிஜிட்டல் பரிமாற்ற அறிக்கையின் 2-வது பதிப்பை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, மிகவும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட மாநிலங்களின் பட்டியலில் கர்நாடகா முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்து இந்தப் பட்டியலில் மகாராஷ்டிரா மற்றும் தில்லி ஆகியவை தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

- இந்தப் பட்டியலில் தமிழ்நாடு 4-வது இடத்திலும் ஆந்திரப் பிரதேசம் 5-வது இடத்திலும் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

# சுற்றுச்சூழல் செய்திகள்


## ஆஸ்க்ளோபினாக் - கழுகுகள்

- கால்நடைப் பயன்பாட்டிற்காக NSAID (Non-Steroidal Anti-Inflammatory Drug) ஆஸ்க்ளோபினாக்கைத் தடை செய்ய இந்திய அரசு திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றது.
- NSAID என்பது "ஸ்டீராய்டு அல்லாத அழற்சி எதிர்ப்பு மருந்து" என்பதாகும்.
- ஆஸ்க்ளோபினாக் இந்தியக் கழுகுகளைக் கொல்லும் திறன் கொண்டது.

### *இதற்கு முந்தையத் தடைகள்*


- இந்திய அரசு கழுகுகளைப் பாதுகாப்பதற்காக 2008 ஆம் ஆண்டு ஜூலை அன்று கால்நடைப் பயன்பாட்டிற்காக டைக்ளோபினாக் மற்றும் அதன் கலவைகளைத் தடை செய்தது.
- 2015 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் இந்த மருந்தை மனிதர்களுக்கு ஒற்றை அளவு உட்செலுத்து மருந்தாகப் பயன்படுத்த மட்டும் அனுமதிக்கப்படுகின்றது.
- விலங்குகளுக்கு வலி நிவாரணியாக டைக்ளோபினாக் அளிக்கப்படுகின்றது.
- ஜிப்ஸ் வகை கழுகுகள் இறந்த விலங்குகளின் உடலை உட்கொள்ளும் போது, இவை கடுமையான சிறுநீரகச் செயலிழப்பை எதிர்கொண்டு இறந்து விடுகின்றன. இவை இந்தியக் கழுகுகள் (ஜிப்ஸ் இண்டிகஸ்) என்றும் அழைக்கப்படுகின்றன.





## களைக் கொல்லிகளைத் தாங்கும் திறன் கொண்ட மரபணு மாற்றப்பட்ட பருத்தி வகை

- களைக் கொல்லிகளைத் தாங்கும் திறன் கொண்ட மரபணு மாற்றப்பட்ட பருத்தி (Bt Cotton - HT Bt Cotton) வகையைச் சட்ட விரோதமாக விதைத்ததற்காக 12 விவசாயிகளுக்கு எதிராக மகாராஷ்டிரா மாநில அரசு காவல் துறையில் புகார் அளித்துள்ளது.
- சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம், 1986-ன் கீழ், அரசினால் ஒப்புதல் அளிக்கப்படாமல் மரபணு மாற்றப்பட்ட பயிர்கள் வளர்க்கப்படுவது சட்டவிரோதமாகும்.
- HT Bt என்பது இந்தியாவில் மரபணு மாற்றப்பட்ட பருத்தியின் 3-வது சந்ததியாகும்.
- க்ரை 1 ab மற்றும் க்ரை 1 ac ஆகியவை இதற்கு முந்தைய சந்ததி இனங்களாகும். இவை பருத்திச் செடிகளில் இளஞ்சிவப்பு காய்ப்புழு தாக்குதலைக் கட்டுப்படுத்துவதில் முக்கியக் கருவியாகச் செயல்படுகின்றன.
- Cry 1 Ac மற்றும் Cry 1 Ac என்பது சிறுசிதிலாக்கத்தின் போது பாக்டீரியம் பேசில்லஸ் தூரிங்ஜெனிசிஸினால் உருவாக்கப்பட்ட புரதங்களாகும்.
- மரபணு மாற்றப்பட்ட பயிர்கள் என்பது பூச்சியிலிருந்துப் பயிர்களைப் பாதுகாக்க தாவரத்தில் Bt போன்ற அதே நச்சுப் பொருட்களை உற்பத்தி செய்ய மரபணு முறையில் மாற்றப்பட்ட பயிர்களாகும்.




## ஆரோக்கிய பச்சா – மரபணு குறிமுறை கண்டுபிடிப்பு

- கேரள பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஆரோக்கிய பச்சா மரபணு அமைப்பின் (ட்ரைச்சோபஸ் சேலனிகஸ்) குறிமுறையை கண்டுபிடித்துள்ளனர்.
- இது அகஸ்திய மலையில் இருக்கும் மிகவும் சக்தி வாய்ந்த மருத்துவத் தாவரமாகும்.
- இந்த அதிசயத் தாவரமானது களைப்பை எதிர்த்துப் போராடுவதற்காக காணிப் பழங்குடியின சமூகத்தினால் பயன்படுத்தப் படுகின்றது. இது தனது பாரம்பரியப்

பயன்பாட்டிற்காக அறியப்படுகின்றது.

- இந்தத் தாவரமானது எதிர்ப்பு ஆக்ஸிஜனேற்றி, பாலுணர்வுத் தூண்டி, அழற்சி எதிர்ப்பு, நோயெதிர்ப்பு, கட்டி எதிர்ப்பு, வயிற்றுப் புண் எதிர்ப்பு, குருதிக் கொழுப்பு மிகை எதிர்ப்பு, கல்லீரல் பாதுகாப்பு மற்றும் நீரிழிவு நோய் எதிர்ப்புப் பண்புக் கூறுகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.



# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## ஷீலா தீக்சித் காலமானார்

- தில்லியின் முன்னாள் முதல்வர் மற்றும் மூத்த காங்கிரஸ் தலைவரான ஷீலா தீக்சித் ஜூலை 20 ஆம் தேதி புது தில்லியில் காலமானார். அவருடைய வயது 81 ஆகும்.
- இவர் நீண்ட காலம் முதலமைச்சராகப் பதவி வகித்தவர்களில் ஒருவராவார். எந்தவொரு இந்திய மாநிலங்களிலும் இல்லாத வகையில் நீண்ட காலம் பணியாற்றிய பெண் முதலமைச்சர் இவராவார். இவர் 1998 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை மொத்தம் 15 ஆண்டுகள் முதலமைச்சராகப் பணியாற்றினார்.
- இவர் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் தேதி கேரளாவின் ஆளுநராகப் பொறுப்பேற்றார். ஆனால் இவர் 2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25 அன்று ஆளுநர் பதவியிலிருந்து விலகினார்.
- 2010 ஆம் ஆண்டில் இவருடைய ஆட்சிக் காலத்தில் முதன்முறையாக காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் இந்தியாவில் நடத்தப்பட்டன.



# விளையாட்டுச் செய்திகள்

## ஹீமா தாஸ் 5-வது தங்கம்

- செக் குடியரசில் நடைபெற்ற நோவே மெஸ்டோ நேட் மெட்டுஜி கிராண்ட் பிரிக்ஸில் இந்தியாவைச் சேர்ந்த ஹீமா தாஸ் மகளிருக்கான 400 மீட்டர் தொலைவை 52.09 வினாடிகளில் கடந்து தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.
- இது ஹீமா தாஸின் முதலாவது 400 மீட்டர் தங்கப் பதக்கமாகும்.
- 2019 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இவர் 5 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார்.
- இதற்கு முன்பு இவர் ஜூலை மாதத்தில் மட்டும் 200 மீட்டர் போட்டியில் 4 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார்.
- இவர் அசாம் மாநிலத்தைச் சேர்ந்த இந்திய அதிவிரைவு தடகள வீராங்கனை ஆவார்.
- போகேஸ்வர் பரூக்கிற்குப் பிறகு சர்வதேச விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்ற அசாமைச் சேர்ந்த 2-வது தடகள வீராங்கனை ஹீமா தாஸ் ஆவார்.




# முக்கிய தினங்கள்

## நிலவில் கால் பதித்ததின் 50வது ஆண்டு – ஜூலை 20

- ஜூலை 20 ஆம் தேதியானது அமெரிக்காவினால் செலுத்தப்பட்ட அப்பல்லோ 11 என்ற திட்டத்தின் 50வது ஆண்டைக் குறிக்கின்றது.
- இது நீல் ஆம்ஸ்ட்ராங், பஸ் ஆல்டிரின் மற்றும் மிச்செல் காலின்ஸ் ஆகிய விண்வெளி வீரர்களுடன் நிலவுக்குச் செலுத்தப்பட்டது.
- நிலவின் மீது கால் பதித்த முதல் நபர் நீல் ஆம்ஸ்ட்ராங் ஆவார்.
- இவர் கால் பதித்து 19 நிமிடங்கள் கழித்து ஆல்டிரின் இவருடன் இணைந்தார்.
- மனிதர்களுடன் நிலவின் மீது தரையிறங்கிய முதலாவது திட்டம் இதுவாகும்.
- இது நாள் வரை, நிலவில் மனிதர்களை வெற்றிகரமாக தரையிறக்கும் திட்டத்தை மேற்கொண்ட ஒரே நாடு அமெரிக்கா ஆகும்.



### சர்வதேச செஸ் (சதுரங்க) தினம் – ஜூலை 20

- ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 20 அன்று சர்வதேச செஸ் (சதுரங்கம்) தினம் அனுசரிக்கப்படுகின்றது. 1924 ஆம் ஆண்டு இத்தினத்தில் சர்வதேச செஸ் கூட்டமைப்பு (FIDE - International Chess Federation) உருவாக்கப்பட்டது.
- FIDE தொடங்கப்பட்டதைக் கௌரவிப்பதற்காக 1966 ஆம் ஆண்டு ஜூலை 20 ஆம் தேதி முதல் சர்வதேச செஸ் தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- ஜூலை 20 ஆம் தேதியை சர்வதேச செஸ் தினமாக அனுசரிப்பதற்கான பரிந்துரையானது யுனெஸ்கோவினால் வழங்கப்பட்டது.
- 1851 ஆம் ஆண்டில் இலண்டனில் முதலாவது நவீன செஸ் தொடர் நடைபெற்றது. இத்தொடரில் ஜெர்மனைச் சேர்ந்த அடோல்ப் ஆண்டர்சன் வெற்றி பெற்றார்.
- 1951 ஆம் ஆண்டில் ஆலன் தூரிங் என்பவர் செஸ் விளையாடுவதற்காக முதலாவது கணினி நிரலை மேம்படுத்தினார்.
- இந்தியாவில் செஸ் விளையாட்டு 5-வது நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டது.
- அந்தக் காலகட்டத்தில் இது "சதுரங்கா" எனப் பெயரிடப்பட்டது.
- இதன்பின் இந்த விளையாட்டு பாரசீகத்திற்குப் பரவியது.

## இதரச் செய்திகள்

### "மருத்துவர்களுக்காக மருத்துவர்கள்" (D – 4 – D) முன்னெடுப்பு

- இந்திய மருத்துவக் கழகமானது (Indian Medical Association - IMA) சோர்ந்து போவதைத் தடுத்தல், மன நலப் பிரச்சினைகளைக் களைதல், குடியிருப்புவாசிகள் மற்றும் மருத்துவர்கள் ஆகியோரிடையே நிகழும் தற்கொலை நிகழ்வுகளைக் குறைத்தல்

ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டு "மருத்துவர்களுக்காக மருத்துவர்கள்" (D – 4 – D) என்ற முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது.

- இத்திட்டத்தின் கீழ், IMA ஆனது மனநல பாதிப்புடன் இருக்கும் மாணவர்களுக்கு உதவுவதற்காக அனைத்து மருத்துவக் கல்லூரிகள் மற்றும் கல்வி மையங்களில் அனைத்து நாட்களிலும் 24 மணி நேரமும் செயல்படும் உதவி மையத்தையும் ஆலோசனை மையங்களையும் அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

- - - - - - - - - - - - - - -